**இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் - 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கூட்டுத்தாபனத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கூட்டுத்தாபனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கூட்டுத்தாபனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- கூட்டுத்தாபனம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கூட்டுத்தாபனத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியம இல. 01 இன் பிரகாரம் முதிர்வு காலம் ஒரு வருடமாக இருக்கும் நிலையான வைப்பு நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறை சொத்துக்களாக காட்டப்பட வேண்டிய போதிலும் முதிர்வு | 2012 ஆம் ஆண்டு நடைமுறைக்கு வரும் புதிய கணக்கீட்டு நியம மாற்றத்துடன், அதற்கேற்ப முதலீடுகளின் பெறுமதி தெளிவுபடுத்தப்பட்டது. அந்த முதலீடுகள் முதிர்வு காலத்தின் அடிப்படையில் | நியம ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காலம் ஒரு வருடமாக இருக்கும் ரூபா 232,373,251 தொகையான நிலையான வைப்பு நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டுள்ளது. | மேற்கொள்ளப்படுகின்றன, அதாவது ஒரு வருடத்தில் முதிர்ச்சியடைந்த பின்னர் அந்த முதலீடுகளை மீண்டும் முதலீடு செய்கிறது. எனவே இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம் (நியம இல. 01 - பிரிவு 66 இன் பிரகாரம்) இது நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டது.<br><br>மேலும், இந்த முதலீடுகள் மேலே குறிப்பிட்டவாறு 2012 ஆம் ஆண்டு முதல் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளன. | |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 79 ஆம் பிரிவின் பிரகாரம் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட ஆனால் தற்போது பயன்பாட்டில் உள்ள ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கொண்டுசெல்லும் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். எனினும் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட போதிலும் தற்போது பயன்பாட்டில் உள்ள ரூபா 3,562,150,536 கிரயமான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட போதிலும் தற்போது பயன்பாட்டில் உள்ள சொத்துக்கள் தொடர்பான விபரங்கள் நிதிக்கூற்றுக்களில் 3.3 இன் கீழ் காட்டப்பட்டுள்ளதுடன் ரூபா 3,562,150,536 பெறுமதிக்குரிய சொத்துக்கள் பட்டியலில் காட்டப்பட்டுள்ளன. | நியம ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 24 (எல்கேஏஎஸ் 24) இன் 17 ஆம் பிரிவின் பிரகாரம் தொடர்புடைய தரப்பினர் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். எனினும், மீளாய்வாண்டிற்கான முக்கிய முகாமைத்துவ ஆளணியினரின் நட்டஈடு தொடர்பான தொடர்புடைய தகவல்கள் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நியம இல. 24 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் தொடர்புடைய தரப்பினர் தொடர்பான தகவல்களை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதுடன் 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களிலும் (நிதிக்கூற்று பக்க இல. 18-9 9 தலைப்பு) அத்தகைய வெளிப்படுத்தல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. எனினும், எதிர்வரும் ஆண்டு முதல் இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு நட்டஈடு தொடர்பான | நியம ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | தகவல்களை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் 38 இன் 9 ஆம் பிரிவின் பிரகாரம் கணனி மென்பொருளானது அருவ சொத்துக்களின் கீழ் இனங்காணப்பட வேண்டும். எனினும் ரூபா 9,542,602 கிரயமான கணனி மென்பொருள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த போதிலும் அது ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டுள்ளது. | எதிர்வரும் ஆண்டில் (2023) கணனி மென்பொருள் தொடர்பில் அருவ சொத்துக்களின் கீழ் காட்டுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நியம ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 203,341,539 தொகையான இருப்புக்களின் பெறுமதியில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 415,862 பெறுமதியான அசையாத இருப்புக்களை வழங்குவதற்கோ அல்லது தீர்ப்பனவு செய்வதற்கோ தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் கைதவிர்த்தல் நடவடிக்கையில், குறித்த அசையாத இருப்பை அகற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | அசையாத இருப்பின் பெறுமதியை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான பரிமாற்றக் கோபுரங்களைப் பயன்படுத்துவதற்கான வாடகையாகவும் மின்சாரக் கட்டணங்களாகவும் பெறப்பட வேண்டிய ரூபா 11,191,484 தொகையை அறவிடுவதற்கு இரண்டு கம்பனிகளுக்கு எதிராக இரண்டு சட்ட வழக்குகள் கூட்டுத்தாபனத்தால் தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 677,550 தொகை சட்டக் கட்டணங்களாக ஏற்பட்டிருந்தது. வழக்கொன்றிலிருந்து கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 3,330,000 தொகை பெறப்பட வேண்டிய போதிலும் இது நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | பெறவேண்டியவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.4 நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தின் தேறிய சொத்து பெறுமதி ரூபா 351,202,545 எதிர்மறை பெறுமதி வரை வீழ்ச்சியடைந்திருந்ததுடன் 2022 சனவரி 01 இல் உள்ளவாறான ரூபா 571,576,904 தொகையான திரண்ட இலாபத்தின் எதிர்மறை மீதி மீளாய்வாண்டிற்கான ரூபா 538,281,105 நட்டம் மற்றும் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட முன்னைய ஆண்டு சீராக்கங்களின் பின்னர் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 1,111,944,969 எதிர்மறை பெறுமதி வரை வீழ்ச்சியடைந்திருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2020 ஆம் ஆண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் ரூபா 69,307,096 தொகையான தொழிற்படு மூலதனத்தின் நிலை 2021 ஆம் ஆண்டில் ரூபா 254,309,644 எதிர்மறை பெறுமதி வரை வீழ்ச்சியடைந்திருந்ததுடன் இது மீளாய்வாண்டின் போது ரூபா 567,595,278 எதிர்மறை பெறுமதி வரை மேலும் வீழ்ச்சியடைந்திருந்தது. நடைமுறை விகிதம் மற்றும் விரைவு விகிதம் என்பன 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் முறையே 1.06 மற்றும் 0.87 ஆக இருந்ததுடன் அவை 2021 ஆம் ஆண்டில் 0.78 மற்றும் 0.6 ஆக இருந்தன. எனினும் மீளாய்வாண்டில் இது 0.56 மற்றும் 0.4 ஆக வீழ்ச்சியடைந்திருந்தது. வங்கி மேலதிகப்பற்று மீதி ரூபா 54,103,374 ஆலும் ஏனைய நிதிப் பொறுப்புகள் ரூபா 67,783,806 ஆலும் அதிகரித்தமை போன்ற காரணங்கள் கூட்டுத்தாபனத்தின் தொழிற்படு மூலதனத்தின் எதிர்மறை பெறுமதிக்கு தாக்கமளித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. 2020 ஆம் ஆண்டில் 4.9 என்ற இணைவு விகிதம் 2021 ஆம் ஆண்டில் 4.5 ஆகவும், மீளாய்வாண்டில் 1.5 ஆகவும் எதிர்மறை இணைவு விகித சூழ்நிலையாக மாறியது. எனினும், தொடர்ச்சியான நட்டங்கள் ஏற்படும் சூழ்நிலையானது, கூட்டுத்தாபனத்தின் மூலதன வீழ்ச்சியையும், கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவினையும் பாதித்திருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.5 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

| விடயம் | தொகை | | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| - | - | (அ) | 2022 ஆம் ஆண்டிற்காக கணக்காய்வினால் கோரப்பட்ட பின்வரும் தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.<br>(i) கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களுக்கு செலுத்தப்படும் போக்குவரத்து படி<br>(ii) வாகனங்களின் பயன்பாடு தொடர்பான தகவல்கள்<br>(iii) கட்டணங்கள் செலுத்தப்பட்டிருக்காத நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான விபரங்கள்<br>(iv) ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட தொலைக்காட்சி நாடகங்கள் தொடர்பான பெறுகைக் கோவைகள். | கருத்துரை வழங்கப்படவில்லை. | கணக்காய்வால் கோரப்பட்ட தகவல் தாமதமின்றி சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| | | (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 344,739,442 மேலதிகப்பற்று மீதியை உறுதிப்படுத்துவதற்கு வங்கி உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 344,739,442 மேலதிகப்பற்று மீதி காசுப் புத்தகத்தின் பிரகாரமான மீதியாக இருந்தது. இறுதி திகதியில் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட வங்கி கணக்கிணக்க கூற்றுக்கள் கணக்காய்வு பிரிவில் சமர்ப்பிக்கப்பட்டன. காசுப் புத்தகம் மற்றும் வங்கி கூற்றுக்களின் பிரகாரம் அதில் மீதிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அதன் மூலம் அந்த மீதிகளை உறுதிப்படுத்த முடியும். மேலும் அத்தகைய மீதிகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள காசுப்பாய்ச்சல் கூற்றிலிருந்து உறுதிப்படுத்தலாம். | கணக்காய்வால் கோரப்பட்ட தகவல் தாமதமின்றி சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

இதற்கு மேலதிகமாக அந்த மீதிகளின் சரியான தன்மையை பரீட்சை மீதியில் உள்ள இரண்டு வங்கிக் கணக்குகளுக்கு இடையிலான வேறுபாட்டின் மூலம் உறுதிப்படுத்த முடியும்.

### 1.6 செலுத்த வேண்டிய மற்றும் பெற வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான சேவைநாடும் கடன்பட்டோர் மீதி ரூபா 333,760,980 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 133,852,987 தொகை அரசாங்க நிறுவனங்களால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டதுடன் ரூபா 199,907,993 தொகை தனியார் துறையால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டது. அதில் கடன்பட்டோர் உறுதிப்படுத்தல் ரூபா 4,435,184 மொத்தப் பெறுமதிக்காக மாத்திரமே சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் அரசாங்க நிறுவனங்களால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட ரூபா 129,871,825 மொத்த மீதியையும் தனியார் துறையால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட ரூபா 199,453,972 மொத்த மீதியையும் கணக்காய்விற்கு உறுதிப்படுத்துவதற்கு முகாமைத்துவம் தவறியிருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | கணக்காய்விற்கு நேரடியாகப் பெறப்பட்ட மீதி உறுதிப்படுத்தல்களை கோருவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 12 சேவைநாடும் கடன்பட்டோரிற்கு எதிராக கூட்டுத்தாபனத்தால் ரூபா 34,991,769 தொகையை அறவிடுவதற்கு சட்ட வழக்குகள் தொடரப்பட்டிருந்ததுடன் ரூபா 1,607,000 தொகை சட்டக் கட்டணங்களாக ஏற்பட்டிருந்தது. கால வரையறைச் சட்டத்தின் பிரகாரம், 6 ஆண்டுகளை விஞ்சுவதற்கு முன்னர் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் மேலும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 4 ஆண்டுகளை விஞ்சியிருந்த கடன்பட்டோர் மீதியானது மொத்த கடன்பட்டோர் மீதியில் 40 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியிருந்ததுடன் அது | கருத்துரை வழங்கப்படவில்லை. | கடன்பட்டோர் மீதிகளை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

ரூபா 132,148,582 தொகையாகும். ரூபா 20,488,346 தொகையை அறவிடுவதற்கு மாத்திரமே சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

### 1.6.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டு முதல் கூட்டுத்தாபனத்தால் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரி பொறுப்பு ரூபா 314,285,876 ஆக இருந்ததுடன் குறித்த தொகையில் 2022 ஆம் ஆண்டில் செலுத்தப்பட வேண்டிய வற் (VAT) பொறுப்பு ரூபா 44,682,510 ஆகும். | கருத்துரை வழங்கப்படவில்லை. | செலுத்த வேண்டிய வரியை தாமதமின்றி செலுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2015 யூலை 14 ஆம் திகதிய 03/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | | | |
| (i) திருத்தப்பட்ட நிதிப் பிரமாணங்களின் 371 (2) ஆம் பிரிவு | ஒரு சந்தர்ப்பத்தில் வழங்கப்படக்கூடிய செயல்நிமித்த முற்பணங்களின் ஆகக்கூடிய எல்லை ரூபா 100,000 ஆக உள்ள போதிலும் நிகழ்ச்சித்திட்டங்கள், தங்குமிடங்கள் மற்றும் கொள்வனவுகளிற்காக குறித்த எல்லையை மீறி 117 சந்தர்ப்பங்களில் ரூபா 54,717,124 தொகை வழங்கப்பட்டிருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) திருத்தப்பட்ட நிதிப் பிரமாணங்களின் 371 (2) (ஆ) மற்றும் 371 (5) ஆம் பிரிவு | உரிய வேலை நிறைவடைந்து 10 நாட்களுக்குள் எடுக்கப்பட்ட கட்டுநிதி தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய | கருத்துரை வழங்கப்படவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட |

| | | |
|---|---|---|
| போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு தீர்ப்பனவு செய்யப்படாத செயல்நிமித்த முற்பணங்களின் மீதி ரூபா 16,277,172 ஆக இருந்தது. | | வேண்டும். |

### 1.8 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு இரண்டு நடைமுறைக் கணக்குகள் தொடர்பான மேலதிகப்பற்று ரூபா 231,076,126 மற்றும் ரூபா 113,663,316 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போது வட்டிகளாக ரூபா 22,793,178 தொகை கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்பட்டிருந்தது. மேலும் ஒரு நடைமுறைக் கணக்கு தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட மேலதிகப்பற்று எல்லை மீளாய்வாண்டின் 08 மாதங்களில் காலத்திற்கு காலம் மீறப்பட்டிருந்தன. | கருத்துரை வழங்கப்படவில்லை. | நிதி முகாமைத்துவம் சரியாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.9 வரிப் பிரமாணங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2006 இன் 13 ஆம் இலக்க பொருளாதார சேவைக் கட்டணங்கள் சட்டத்தின் 03 (1) ஆம் பிரிவின் பிரகாரம், பொருளாதார சேவைக் கட்டணங்களின் மேலதிகக் கொடுப்பனவுகளை தொடர்ந்துவரும் 2 ஆண்டுகளுக்குள் செலுத்தப்படும் வருமான வரியிலிருந்து தீர்ப்பனவு செய்யக்கூடிய போதிலும் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் மேலதிகமாக செலுத்தப்பட்ட ரூபா 21,030,312 பொருளாதார சேவை கட்டணம் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் பெறவேண்டிய முற்பணங்கள் மற்றும் வைப்புக்களின் கீழ் காட்டப்பட்டுள்ளது. எனவே நிதி நிலைமை அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. | கூட்டுத்தாபனத்திற்கு நட்டம் ஏற்பட்டதால் முன்னைய ஆண்டுகளில் வருமான வரி செலுத்தப்பட்டிருக்காததால் செலுத்தப்பட்ட பொருளாதாரக் கட்டணங்கள் தீர்ப்பனவு செய்யப்பட முடியாதிருந்தன. எனவே ஏனைய செலுத்த வேண்டிய வரிகளுக்கு எதிராக பொருளாதாரக் கட்டணங்களை தீர்ப்பனவு செய்வதற்கு உள்நாட்டு இறைவரி திணைக்களத்துடன் கலந்துரையாடுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிதி நிலைமையை சரியாக காண்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.10 தகவல் தொழில்நுட்ப பொதுக் கட்டுப்பாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஒரு ஊடக நிறுவனமாக காட்சி நிகழ்ச்சிகளை சேமிப்பதற்காக பேணப்பட்டு வந்த காட்சி நூலகம் 1 | கருத்துரை வழங்கப்படவில்லை. | கூட்டுத்தாபனத்தின் உள்ளடக்கத்தை பாதுகாப்பதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் 2 இன் உள்ளடக்கம் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமானதுடன் தேவைப்படும் போது மீண்டும் வெளியிடுவது கூட்டுத்தாபனத்தின் முக்கிய சொத்தாக உள்ளது. தொழில்நுட்பத்தின் மாற்றங்களுக்கு ஏற்ப புதிய தொழில்நுட்பத்துடன் நூலக உள்ளடக்கத்தைப் புதுப்பிக்கும் மதிப்புமிக்க நிகழ்ச்சிகளைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டிய போதிலும், 1996 ஆம் ஆண்டு கூட்டுத்தாபனம் ஆரம்பித்ததிலிருந்து அனலொக் தொழில்நுட்பத்தின் கீழ் இயங்கி வந்த 2700 எண்ணிக்கையிலான VRT, BETA மற்றும் UMATIC வடிவங்கள் நாளதுவரை புதிய தொழில்நுட்பத்திற்கு மாற்றப்பட்டிருக்கவில்லை. | | நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிறுவனமானது ஒரு நீண்ட வரலாற்றைக் கொண்டு மற்ற ஊடக நிறுவனங்களைப் போலல்லாமல் 1982 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டதால் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான முக்கியமான காப்புப்பிரதிகளை (backups) பேணுவதற்கான சரியான முறை முறையாக அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.<br><br>வழக்கற்றுப் போன கட்புல இறுவெட்டுக்களின் விளைவாக, 211 இறுவெட்டுக்கள் பூஞ்சணம் மற்றும் பூஞ்சை (mold and fungus) உருவாக்கம் காரணமாக பயன்படுத்த முடியாததாகிவிட்டன, இதனால் அவற்றை புதிய தொழில்நுட்பத்திற்கு மாற்ற முடியாதிருந்தன.<br><br>இதன் விளைவாக, தேவைக்கேற்ப மற்ற ஊடக நிறுவனங்களுக்கு அரிய மற்றும் முக்கியமான வீடியோக்களை வழங்குவதன் மூலம் மேலதிக வருமானத்தைப் பெறுவதற்கான வாய்ப்புக்கள் கூட்டுத்தாபனத்தால் தவிர்க்கப்பட்டிருந்தன. | கருத்துரை வழங்கப்படவில்லை. | சொத்துக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | உயர்தரம் மற்றும் அதிக பார்வையாளர்களை ஈர்ப்பதாகக் கூறப்படுகின்ற கூட்டுத்தாபனத்தால் டப்பிங் செய்யப்பட்டு ஒளிபரப்பப்பட்ட பெரும்பாலான தொலைக்காட்சி நாடகங்கள் மற்றும் குழந்தைகள் கார்ட்டூன்கள் எந்த மாற்றமும் இல்லாமல் கூட்டுத்தாபன | கருத்துரை வழங்கப்படவில்லை. | சொத்துக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இலட்சனையுடன் அதிக எண்ணிக்கையிலான ஏனைய யூடியூப் சேனல்களில் ஒளிபரப்பப்பட்டமை அவதானிக்கப்பட்டது. அத்தகைய கார்ட்டுன்கள் மற்றும் வெளிநாட்டு தொலைக்காட்சி நாடகங்களை கூட்டுத்தாபனத்தின் காட்சி நூலகத்திலிருந்து மாத்திரமே பெற்றுக்கொள்ள முடியும் என்பதால், முறையான பாதுகாப்பு முறையை அமுல்ப்படுத்துவதற்கும், வெளித் தரப்பினரால் இதுபோன்ற நிகழ்ச்சிகள் தவறாக பயன்படுத்தப்படுவதைத் தடுப்பதற்கு சரியான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையை ஏற்படுத்துவதற்கும் கூட்டுத்தாபனத்தால் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் அவை கூட்டுத்தாபனத்தின் "ரூ பொழுதுபோக்கு" இல் விற்பனை செய்யப்படுவதில்லை. | | |
| (ஈ) | காட்சி நூலகம் மற்றும் கசட் (cassette) நூலகத்தின் உள்ளடக்கத்தை தாமதமின்றி பயன்படுத்தும் நபர்களை இனங்காண்பதற்கும், கூட்டுத்தாபனத்தின் கணனி முறைமைக்கு USB டிரைவ்களை பொருத்துவதை தவிர்ப்பதற்கு முறையான பாதுகாப்பு முறைமையை ஏற்படுத்துவதற்கும், கூட்டுத்தாபனத்தின் ஸ்ரூடியோக்களில் கூட்டுத்தாபனத்தால் தயாரிக்கப்படும் நிகழ்ச்சிகளைத் திருத்துவதற்கும், வெளியில் திருத்தம் செய்வதைத் தடுக்கும் வகையில் சட்டங்கள் மற்றும் விதிகளை உருவாக்குவதற்கும் நூலகத்தை அணுகுவதற்கான அதிகாரத்தை நிர்ணயிப்பதற்கு கூட்டுத்தாபனத்தால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | சொத்துக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 538,281,105 பற்றாக்குறையொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 227,342,397 ஆக இருந்ததால் நிதி விளைவுகளில் ரூபா 310,938,708 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. வான் கால வருமானம் ரூபா 221,189,415 ஆல் குறைவடைந்தமை இவ் வீழ்ச்சிக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 2.2 பிரதான வருமான செலவின விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் வான் கால வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 19 சதவீதத்தால் குறைவடைந்துள்ளதுடன் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களின் வான் கால வருமானம் 85 சதவீதத்தால் குறைவடைந்தமை இவ் வீழ்ச்சிக்கு பிரதானமாக

தாக்கமளித்திருந்தது. ஏனைய செயற்பாட்டு வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 12 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் ஏனைய செயற்பாட்டு வருமானத்தில் உள்ளடங்கிய மூலதன செலவின விடயங்களுக்காக வழங்கப்பட்ட அரசாங்க மானியம் 42 சதவீதத்தால் அதிகரித்தமை, ”நானமிஹிர” வினாத்தாள் விற்பனை வருமானம் 51 சதவீதத்தால் அதிகரித்தமை, முன்னைய ஆண்டில் காணப்படாத பதில் அக்கடமி வருமானம் தொடர்பான ரூபா 12,051,076 வருமானம் மற்றும் புத்த நிகழ்ச்சிகள் மற்றும் இசை நிகழ்ச்சிகளின் வருமானம் என்பன இந்த அதிகரிப்புக்கு முக்கியமாக தாக்கமளித்திருந்தன.

மீளாய்வாண்டிற்கான விநியோகச் செலவினங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 45 சதவீதத்தால் குறைவடைந்துள்ளதுடன் முகவர் தரகுகள் 41 சதவீதத்தால் குறைவடைந்தமை இவ் வீழ்ச்சிக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது. நிர்வாகச் செலவினங்கள் 0.48 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது. நிதி மற்றும் ஏனைய செலவினங்கள் 31 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் வங்கிக் கடன் வட்டி 52 சதவீதத்தால் அதிகரித்தமை மற்றும் சட்டக் கட்டணங்கள் 597 சதவீதத்தால் அதிகரித்தமை என்பன குறித்த விளைவிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

2021 ஆம் ஆண்டிற்கான நடைமுறை விகிதம் மற்றும் விரைவு விகிதம் என்பன முறையே 0.78 மற்றும் 0.6 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போது இவை 0.56 மற்றும் 0.4 ஆக குறைவடைந்துள்ளன. 2021 ஆம் ஆண்டிற்கான எதிர்மறை தொழிற்படு மூலதனத்தின் நிலை ரூபா 254,309,644 ஆக இருந்ததுடன் இது மீளாய்வாண்டின் போது ரூபா 567,596,278 (எதிர்மறை) வரை மேலும் குறைவடைந்திருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான வங்கி மேலதிகப்பற்று மீதி ரூபா 54,103,374 ஆல் அதிகரித்தமை மற்றும் ஏனைய நிதிப் பொறுப்புக்கள் ரூபா 67,783,806 ஆல் அதிகரித்தமை போன்ற காரணங்கள் குறித்த எதிர்மறை தொழிற்படு மூலதனத்தின் நிலைமைக்கு தாக்கமளித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

முன்னைய ஆண்டின் மொத்தலாப விகிதம் எதிர்மறை 6.3 சதவீதமாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போது இது எதிர்மறை 32.6 சதவீதமாக மாறியிருந்தது. 2021 ஆம் ஆண்டுக்கான தேறியலாப விகிதம் 19.7 சதவீதமாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போது இது எதிர்மறை 57 சதவீதமாக மாறியிருந்தது. வான் கால விற்பனை வருமானம் குறைவடைந்தமை குறித்த வீழ்ச்சிக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

2021 ஆம் ஆண்டின் கடன் உரிமை மூலதன விகிதம் 4.5 உயர் இணைவாக இருந்ததுடன் மீளாய்வாண்டில் இது எதிர்மறை 1.5 உயர் இணைவாக மாறியிருந்தது. நீண்ட கால பொறுப்புக்களின் வீழ்ச்சியுடன் ஒப்பிடும் போது தொடர்ச்சியான நட்ட சூழ்நிலையின் விளைவாக உரிமை மூலதனம் எதிர்மறை பெறுமதி வரை குறைவடைந்தமை குறித்த நிலைமைக்கு தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 106 உத்தியோகத்தர்களால் கூட்டுத்தாபனத்திற்கு மீளளிக்கப்படாத கசட்டுகளின் எண்ணிக்கை 819 ஆக இருந்ததுடன் அந்த கசட்டுகளின் பெறுமதி ரூபா 2,375,991 ஆகும். | கருத்துரை வழங்கப்படவில்லை. | மீளளிக்கப்பட்டிருக்காத கசட்டுகளைப் பெற்றுக்கொள்வதற்கு சரியான முறையைப் பின்பற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுத்தாபனத்தின் தலைவர்கள், பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், பணிப்பாளர் நாயகம்/ பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்/ செயற்பாட்டு பணிப்பாளர் போன்ற பிரிவுகளில் பணியில் ஈடுபடும் உத்தியோகத்தர்களின் வீட்டு உபயோகத்திற்காக தொலைக்காட்சித் தொகுதிகள், DVD தொகுதிகள், தொலைபேசிரப் மற்றும் கணனிகள் போன்றன வழங்கப்பட்டிருந்ததுடன் சேவை முடிவுறுத்தப்படும் போது குறைந்தபட்ச சேவை காலம் அல்லது வேறு எந்த அளவுகோல்களையும் கருத்தில் கொள்ளாமல் மிகக் குறைந்த பெறுமதிக்கு எடுத்துக்கொள்ளும் வாய்ப்பை வழங்குவது கூட்டுத்தாபனத்தின் வழக்கமான நடைமுறையாக இருந்தது. கடந்த சில வருடங்களாக கூட்டுத்தாபனத்தின் தலைவர், பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் மற்றும் பணிப்பாளர் நாயகங்கள் மிகக்குறுகிய காலத்திற்குள் தமது சேவைகளை கூட்டுத்தாபனத்திற்கு வழங்கும் போக்கு காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. உத்தியோகத்தர்கள் அவர்களது பதவியிலிருந்து வெளியேறும் போது மேற்படி பொருட்களை கொண்டு செல்வதால், குறித்த பதவிகளுக்கு வருகின்ற புதிய உத்தியோகத்தர்களுக்கு கூட்டுத்தாபனம் புதிய பொருட்களை வழங்க வேண்டியுள்ளது. இந்த நிலைமை கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமையை மோசமாக பாதித்துள்ளது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமையை நல்ல முறையில் பேணுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2022 ஆம் ஆண்டில் நிகழ்ச்சித்திட்டப் பிரிவின் கீழ் உள்ள உப பிரிவுகளிற்கு இணைக்கப்பட்ட 18 தயாரிப்பாளர்களால் | கருத்துரை வழங்கப்படவில்லை. | மனித வளத்தை வினைத்திறனாகவும் செயற்திறனாகவும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போதுமானளவு தயாரிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | தற்போது கூட்டுத்தாபனம் எதிர்நோக்குகின்ற நிதி நெருக்கடியை தவிர்க்கும் வகையில், கூட்டுத்தாபனத்தின் வருமானத்தை அதிகரிப்பதற்கும், செலவினங்களைக் குறைப்பதற்கும் பணிப்பாளர் சபை நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய போதிலும் இது தொடர்பாக பணிப்பாளர் சபைக் கூட்டங்களில் உரிய கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. அதற்குப் பதிலாக பணிப்பாளர் சபைக் கூட்டங்களில் நியமனங்கள், பதவி உயர்வுகள், படிகளை அதிகரித்தல், வெளிநாட்டு விடுமுறையை அங்கீகரித்தல் போன்ற பதவியணியினர் விடயங்களை தீர்ப்பதற்கு அதிக கவனம் செலுத்தப்பட்டிருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | தற்போது கூட்டுத்தாபனம் எதிர்கொள்ளும் நிதி நெருக்கடியை தவிர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | எந்தவொரு நிறுவனத்தையும் பற்றிய ஆரம்ப வடிவம் (image), அந்த நிறுவனத்தின் வரவேற்புப் பிரிவால் எந்தவொரு வெளித் தரப்பினருக்கும் வழங்கப்படுகிறது. வெளியில் இருந்து வரும் தரப்பினர்களை நட்பு ரீதியாகவும், இனிமையாகவும் வரவேற்று அவர்களின் தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்றுவதற்கு தேவையான வழிகாட்டல்களை வழங்குவது வரவேற்பு பிரிவு பதவியணியினரின் பொறுப்பாகும். எனினும், அங்கீகாரம் பெற்ற அரச நிறுவனம் என்ற வடிவத்தை பாதுகாக்கும் வகையில், வரவேற்பாளர் பதவிக்கு தகுந்த உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு கூட்டுத்தாபன முகாமைத்துவம் தவறியிருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | பதவிகளுக்கு உரிய கடமைகளை நிறைவேற்றும் திறன் கொண்ட உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தால் மூன்று உள்ளூர் தொலைக்காட்சி நாடகங்கள் ரூபா 20,958,000 இற்கு | கருத்துரை வழங்கப்படவில்லை. | நட்டங்களை இழிவுபடுத்துவதற்கு நடவடிக்கைகள் |

| | | | |
|---|---|---|---|
| | கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 13,408,260 தொகை வான் கால வருமானமாக ஈட்டப்பட்டிருந்தது. எனினும் அந்த நாடகங்களை ஒளிபரப்பியமை தொடர்பாக ஏற்பட்ட மொத்த கிரயம் ரூபா 22,969,239 ஆக இருந்ததால் குறித்த உள்ளூர் தொலைக்காட்சி நாடகங்களை ஒளிபரப்பியதால் ஏற்பட்ட நட்டம் ரூபா 9,560,979 ஆகும். ஆண்டின் போது ஆறு தனி எபிசொட் (episode) தொலைக்காட்சி நாடகங்கள் தயாரிக்கப்பட்டு ஒளிபரப்பப்பட்டன, மேலும் அந்த ஆறில் 5 நாடகங்கள் நட்டத்தைச் சந்தித்திருந்தன. அதற்காகச் ஏற்பட்ட மொத்தச் செலவினம் ரூபா 1,370,152 ஆக இருந்ததுடன் ரூபா 661,147 தொகை வான் கால வருமானமாக ஈட்டப்பட்டிருந்தது. எனவே மொத்த நட்டம் ரூபா 709,005 ஆகும். ஆண்டின் போது ஒளிபரப்பப்பட்ட 03 வெளிநாட்டுத் தொலைக்காட்சி நாடகங்களில் 02 வெளிநாட்டுத் தொலைக்காட்சி நாடகங்களின் செலவினம் ரூபா 4,978,270 ஆக இருந்ததுடன் அவர்களிடமிருந்து ஈட்டிய வருமானம் ரூபா 3,727,800 மாத்திரமேயாகும். இதனால் ரூபா 1,250,470 நட்டம் ஏற்பட்டிருந்தது. | | எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ஒரு குறிப்பிட்ட இலக்கை நிறைவேற்றுவதற்கு, குறிப்பிட்ட காலப்பகுதி தொடங்குவதற்கு முன்னர் குறிப்பிட்ட இலக்கு இனங்காணப்பட்டு, அதனை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் விளைவு காலப்பகுதியின் முடிவில் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். எனினும், ஒவ்வொரு மாதத்தின் தொடக்கத்திலும் கூட்டுத்தாபனத்தின் சந்தைப்படுத்தல் பிரிவினால் சந்தைப்படுத்தல் பதவியணியினரிற்கு சந்தைப்படுத்தல் இலக்குகள் வழங்கப்பட்டிருக்காததுடன் அதற்குப் பதிலாக மாதத்தின் இலக்காகப் மாதத்தின் இறுதியில் அடைந்துகொள்ளப்படும் விளைவைக் காட்டும் முறையொன்று பின்பற்றப்பட்டிருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | சந்தைப்படுத்தல் இலக்குகள் காலப்பகுதியின் தொடக்கத்தில் வழங்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பணிப்பாளரின் (சந்தைப்படுத்தல்) கடமைகளில் ஒரு முக்கிய பகுதியானது, கூட்டுத்தாபனத்தின் சந்தைப்படுத்தல் பிரிவின் மனித வளங்களை வினைத்திறனாகவும் பயனுள்ள வகையிலும் செயற்படுத்துவதாகும். எனினும் ஒவ்வொரு வருடமும் சந்தைப்படுத்தல் நிறைவேற்றுநர்கள் சம்பளமற்ற விடுமுறையில் இருந்தமை, நாளாந்த வருகை மற்றும் புறப்பாடு என்பன கைவிரல் அடையாள இயந்திரத்தில் சரியாகப் பதிவு செய்யப்பட்டிருக்காதமை, குறைவான செயலாற்றல் ஆகிய நிகழ்வுகள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. மேலும் இது தொடர்பாக பணிப்பாளரால் (சந்தைப்படுத்தல்) சரியான கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | சந்தைப்படுத்தல் பிரிவின் மனித வளங்களை வினைத்திறனாகவும், செயற்திறனாகவும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தாபனத்திற்கு எதிராக வெளித் தரப்பினரால் 15 சட்ட வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன் அதில் 07 வழக்குகள் தொடர்பாக வாதியால் கோரப்பட்ட நட்டஈடு ரூபா 933,000,000 ஆகும். சட்டத்தரணியின் கட்டணமாக இந்த வழக்குகளுக்காக மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 6,188,540 தொகை ஏற்பட்டிருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | கூட்டுத்தாபனத்திற்கு ஏற்படக்கூடிய நட்டங்களை தவிர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 7 (1) ஆம் பந்தியின் பிரகாரம் வருமானக் கணக்கின் தீவிரப் பற்றாக்குறையை 5 வருட காலப்பகுதியினுள் அல்லது அந்தக் கணக்கின் அதிகப்படியான மிகையின் மூலம் நிதி அமைச்சரால் தீர்மானிக்கப்படும் எந்தக் காலப்பகுதியினுள்ளும் தீர்ப்பனவு செய்வதற்குப் போதுமானதாக இருக்கும் வகையில் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளைப் பேணுவது கூட்டுத்தாபன பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும். எனினும் கூட்டுத்தாபனத்தின் அண்மைய ஐந்தாண்டுகளின் தேறிய நட்டம் ரூபா 1,312,287,598 ஆக இருந்ததுடன் கூட்டுத்தாபன தொழிற்பாட்டின் மூலம் எதிர்பார்த்த அளவு அடைந்து கொள்ளப்பட்டிருக்காதமை | கருத்துரை வழங்கப்படவில்லை. | நிதிச் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரமும் இழப்புகளைத் தவிர்ப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

அவதானிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| (ஊ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான கூட்டுத்தாபன ஊழியர்களின் சம்பளம் ரூபா 30,667,506 ஆல் அதிகரித்திருந்ததுடன் 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு கிரயம் 137 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. எனினும் 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான வருமானம் ரூபா 182,119,548 ஆல் குறைவடைந்திருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**3.4 பெறுகை முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அரசாங்க பெறுகை வழிகாட்டலின் 4.2.1 ஆம் பிரிவின் பிரகாரம் ஆகக்குறைந்தது 3 ஆண்டுகளுக்கு பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டு, தொடர்ந்துவரும் ஆண்டு தொடர்பான பெறுகை நடவடிக்கைகளுக்காக விரிவான திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். எனினும், மீளாய்வாண்டின் போது நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த முன்னுரிமை பட்டியலில் உள்ள ரூபா 41 மில்லியன் மதிப்பிடப்பட்ட பெறுமதிக்கான 04 செயற்பாடுகள் உட்பட மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட பெறுகைத் திட்டம் 2022 ஒக்தோபர் 31 இல் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | பெறுகை வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) ஒரு போட்டியின் நேரடி ஒளிபரப்பு உரிமையானது, ஒளிபரப்பு உரிமையை பெற்றிருந்த சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் நேரடி இணைப்பின் மூலம் முறையான பெறுகை நடைமுறையைப் பின்பற்றி செலவு குறைந்த முறையில் பெறப்பட வேண்டிய போதிலும் வீதி பாதுகாப்பு உலகத் தொடர் T 20 இன் நேரடி ஒளிபரப்பு உரிமையை பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பத்தில் 2006 அரசாங்க பெறுகை வழிகாட்டல் பின்பற்றப்படாமல் ஐ.அ.டொலர் 48,500 பெறுமதிக்கு ஒரு நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டிருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | பெறுகை வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இந்த போட்டி 2022 செப்தெம்பர் 10 முதல் ஆரம்பிக்கப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்த போதிலும் 2022 செப்தெம்பர் 07 இலேயே ஒளிபரப்பு உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கு கூட்டுத்தாபனத்தினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. முறையான திட்டம் மற்றும் போதிய கால அவகாசம் மூலம் செயற்பட்டு கூட்டுத்தாபனத்திற்கு அதிகபட்ச அனுகூலத்தைப் பெற்றுக்கொள்வதில் முகாமைத்துவத்தால் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் 03 நாட்கள் போன்ற மிகக் குறுகிய காலத்தில், குறித்த வழங்குநருடன் உடன்படிக்கையொன்றை செய்து கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. | கருத்துரை வழங்கப்படவில்லை. | பெறுகை வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | செப்தெம்பர் 07 ஆம் திகதி கிரிக்கெட் குழுவினால் தலைவருக்கு உள்ளக குறிப்பொன்று அனுப்பப்பட்டு, குறித்த போட்டியின் ஒளிபரப்பு உரிமையை உள்ளூர் விளம்பர நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்வதற்கான அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. எனினும், கூட்டுத்தாபனம் வெளிநாட்டு நிறுவனமான கிரவுண்ட் பிக்சர்ஸ் இன்டர்நேஷனல் FZCO உடன் முதல் தரப்பாக உடன்படிக்கையொன்றை கைச்சாத்திட்டிருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | பெறுகை வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | குறித்த போட்டியானது 2022 செப்தெம்பர் 10 முதல் ஒளிபரப்பப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்த போதிலும் குறித்த போட்டியை ஒளிபரப்புவதற்கான பின்னடைவுகளைத் (setbacks) தயாரிப்பதற்குத் தேவைப்படக்கூடிய டிஜிட்டல் பிரிண்ட்டை கொள்வனவு செய்வதற்கான p4 அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளும் வரை மேவுகை அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக சம்பந்தப்பட்ட சிரேஷ்ட தயாரிப்பாளரால் பணிப்பாளர் நாயகத்திற்கு 2022 செப்தெம்பர் 08 இல் கடிதம் அனுப்பப்பட்டிருந்ததுடன் அன்றைய தினமே பணிப்பாளர் நாயகத்தால் அங்கீகாரம் | கருத்துரை வழங்கப்படவில்லை. | போட்டிக் கேள்வி செயன்முறையின் கீழ் குறைந்த கிரயத்திற்கு உகந்த விநியோகத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்பட்டிருந்தது. மேலும் 05 வழங்குநர்களுக்கு ஒரே நாளில் மின்னஞ்சல்கள் மூலம் கூறுவிலைகள் வழங்கப்பட்டு 2022 செப்தெம்பர் 09 வரை ஒரே ஒரு வழங்குநரால் மாத்திரமே கூறுவிலை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பின்னடைவுகளைத் தயாரிப்பதற்குத் தேவையான டிஜிட்டல் பிரிண்ட்டை கொள்வனவு செய்வதற்கு குறித்த வழங்குநர் அதே நாளில் தெரிவுசெய்யப்பட்டிருந்தார். பொதுவாக ஒரு சர்வதேச போட்டியை நடத்துவதற்கான காலம் முன்கூட்டியே தீர்மானிக்கப்படும் மைதானத்தில், போட்டியை ஒளிபரப்புவதற்கு தேவையான பொருட்களை 2 நாட்கள் போன்ற குறுகிய காலத்திற்குள் வழங்கி பெற்றுக்கொள்வதற்கு கூட்டுத்தாபனத்தால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தது. இதன் விளைவாக, போட்டி கேள்வி செயன்முறையின் கீழ் குறைந்த கிரயத்திற்கு உகந்த விநியோகத்தைப் பெறுவதற்கான வாய்ப்பு கூட்டுத்தாபனத்தால் தவிர்க்கப்பட்டிருந்தது. மேலும் விளையாட்டு ஒளிபரப்பில் அனுபவம் வாய்ந்த ஒரு அமைப்பு முன்கூட்டியே முறையான திட்டத்தின் பிரகாரம் செயற்பட்டிருக்காதமை சிக்கலானதாக உள்ளது. | | |
| (ஊ) | இரு தரப்பினருக்கும் இடையே செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்புக்கொள்ளப்பட்ட தரப்பிற்கு முழுமையான ஒளிபரப்பு உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கு இரண்டு தவணைகளாக ஐ.அ.டொலர் 24,250 என ஐ.அ.டொலர் 48,500 தொகை கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்பட வேண்டும். உடன்படிக்கையின் 02 (உ) பிரிவின் பிரகாரம் ஐ.அ.டொலரில் உரிய கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டால் அது உடன்படிக்கையின் முதல் தரப்பினரான கிரவுண்ட் பிக்சர்ஸ் இன்டர்நேஷனல் FZCO இன் வங்கியின் எமிரேட் இஸ்லாமிய வங்கிக்கு செலுத்தப்பட வேண்டும். மறுபுறம், மேற்படி உடன்படிக்கையில் ஒரு நிபந்தனை | கருத்துரை வழங்கப்படவில்லை. | உடன்படிக்கை விதிமுறைகள் தெளிவானதாகவும் வெளிப்படையானதாகவும் இருக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளடக்கப்பட்டிருந்தது, இலங்கை ரூபாயில் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டால், அது கொமர்ஷல் பாங்க் சிலோன் பிஎல்சிக்கு செலுத்தப்பட வேண்டும். இதில் ULC புறட்காஸ்டிங் நெட்வேர்க் (பிறைவேட்) லிமிட்டட் வங்கி உடன்படிக்கையின் ஒரு தரப்பினா் அல்ல. எனினும், உடன்படிக்கையின் ஒரு தரப்பினர் அல்லாத மற்ற தரப்பினருக்கு இரு தரப்பினருக்கும் இடையே செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்படும் கொடுக்கல்வாங்கலின் பெறுமதியை செலுத்துவதற்கான நிபந்தனையை உள்ளடக்கியமை கணக்காய்வில் சிக்கலானதாக உள்ளது. | | |
| (எ) | போட்டியின் நேரடி ஒளிபரப்பு தொடர்பான உடன்படிக்கையின் முதல் தரப்பான கிரவுண்ட் பிக்சர்ஸ் இன்டர்நேஷனல் FZCO துபாய் டிஜிட்டல் பார்க் கட்டிடத்தின் துபாய் சிலிக்கான் ஒயாசிஸில் அமைந்திருந்தது என்பதை நிரூபிப்பதற்கு இலத்திரனியல் சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் குறித்த நிறுவனம் டிஜிட்டல் இடத்தில் வணிகத்தை மேற்கொள்வதற்கு உரிமம் பெற்ற இடம் என்பது குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் கிரவுண்ட் பிக்சர்ஸ் இன்டர்நேஷனல் FZCO இன் தொலைபேசி இலக்கம் கூட குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. போட்டியை ஒளிபரப்பியதன் மூலம் கிடைத்த வருமானம் ரூபா 16,507,500 ஆக இருந்ததுடன் தற்போது போட்டியை ஒளிபரப்பியதால் ஏற்பட்ட நட்டம் ரூபா 8,936,333 ஆக இருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | உடன்படிக்கைகளை கைச்சாத்திடுதல் முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஏ) | அரசாங்க ஊடக அலைவரிசையாக ஒளிபரப்பு உரிமையை பெற்றுக்கொள்வதற்கு நேரடியாக இணைக்கப்படும் கூட்டுத்தாபனததிற்கு பெற்றுக்கொள்ளப்படக்கூடிய அனுகூலங்களைப் புறக்கணிப்பதற்கான சந்தர்ப்பங்களை அனுமதிப்பது சர்ச்சைக்குரிய விடயமாகும். மேலும் இப் பெறுகையின் வெளிப்படைத்தன்மை தொடர்பாக திருப்பதியடைய முடியாதிருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | பெறுகை நடவடிக்கைகள் வெளிப்படையானதாக இருக்க வேண்டும். |

**3.5 மனித வளங்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட நிரந்தர பதவியணியினா் 1041 ஆக இருந்ததுடன் ஒப்பந்த அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினா் 08 ஆக இருந்தது. எனினும் அங்கீகரிக்கப்பட்ட நிரந்தர பதவியணியில் 785 பேர் பணிக்கமர்த்தப்பட்டுள்ளதுடன் 16 பேர் ஒப்பந்த அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் பணிக்கமர்த்தப்பட்டுள்ளனர். அதன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட நிரந்தரப் பதவியணியில் 256 வெற்றிடங்களும், ஒப்பந்த அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 08 வெற்றிடங்களும் காணப்பட்டன. இதற்கு மேலதிகமாக 12 ஊழியர்கள் பணி நியமன அடிப்படையில் பணிக்கமர்த்தப்பட்டுள்ளனர். மேலும் 18 நிரந்தர உத்தியோகத்தர்களும், 11 ஒப்பந்த அடிப்படை மற்றும் 2 பணி நியமன அடிப்படை உத்தியோகத்தர்களும் 15 பதவிகளில் பணிக்கமர்த்தப்பட்டுள்ளனர், அவை அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 16 நிரந்தர உத்தியோகத்தர்களும், 05 ஒப்பந்த அடிப்படை மற்றும் 10 பணி நியமன அடிப்படை உத்தியோகத்தர்களும் அங்கீகரிக்கப்பட்ட 05 பதவிகளுக்கு மேலதிகமாக பணிக்கமா்த்தப்பட்டுள்ளனர். | கருத்துரை வழங்கப்படவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அது கடைபிடிக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தரின் பதவி சேர்க்கப்பட்டிருந்த போதிலும், அது 2019 மே 22 முதல் வெற்றிடமாக இருந்தது. இதன் விளைவாக உள்ளக கணக்காய்வுப் பிரிவின் பணியை செயற்திறனாக மேற்கொள்ளும் திறன் குறைவாக இருந்தது. எனினும் இந்த அறிக்கை திகதி வரை குறித்த பதவியை நிரப்புவதற்கு கூட்டுத்தாபனத்தால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |